[25th March 1961

கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இங்கு லைசென்ஸ் வாங்குவதில் இரண்டு விதமிருக்கின்றன. குறைந்த கட்டணம் கொடுத்து "ஆல் இந்தியா ரேடியோ" மட்டும் கேட்கவும், மேலே இரண்டு ரூபாய் கட்டணம் கொடுத்து வாங்கினால் ரஷ்யா, சைனா போன்ற நாடுகளைக் கேட்கலாம், எல்லா நாடுகளையும் கேட்கலாம். ஆகவே, கம்யூனிஸ்ட் நாடுகள் போன்று மற்ற ஸ்டேஷன்களைக் கேட்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இங்கே கிடையாது.

SRI A. A. RASHEED : ஸார், ஒரே சமயத்தில் ஒரே ரேடியோவில் எல்லா ஸ்டேஷன்களையும் கேட்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு சிலவேளைகளில் நாம் எல்லோரும் சேர்ந்து ஒரே சமயத்தில் பேசுவதற்கு முயற்சிப்பது போல்தான்.

SRI N. MARUDACHALAM : ரேடியோ கொடுப்பது பொழுது போக்கிற்காக என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் நகர சபைகளில் மின்சார கம்பத்தில் ரேடியோக்களை வைத்திருப்பதை அகற்றிவிடும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது, இதற்கு என்ன காரணம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.. ரேடியோ வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் பயன்படுத்துவதில்லை, அறிவு புகட்டுவதற்காகவும் ரேடியோ பயன்படுத்தப்படுகிறது.

SRI V. SANKARAN : சிலர் மாஸ்கோ ஸ்டேஷன் மட்டும் கேட்கவேண்டுமென்றால் அதற்கு மட்டும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்காக தனியாக கட்டணம் கட்டி ரேடியோவை வீட்டில் வாங்கிவைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டால் மாஸ்கோ கேட்கவும் எந்த ஸ்டேஷன் கேட்கவும் எந்தவிதமான தடையும் இருக்காது.

Sethusamudram Project and Tuticorin Port (III Plan)

* 1073 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the steps taken by the Government to represent to the Centre to include Sethusamudram Project and development of Tuticorin Port in the Third Five-Year Plan; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The need for taking up both the Sethusamudram Project and the development of Tuticorin as an all-weather Port during the Third Plan has been repeatedly urged by the Madras Government with the Government of India in writing and at various Conferences, including discussions at Ministerial level. As a result, preliminary investigation by putting trial bores is being carried on with the approval of the Government of India to arrive at a fairly accurate estimate of the

25th March 1961]

cost of the Sethusamudram Project. As regards developing Tuticorin as an all-weather port at an estimated cost of about Rs. 10.27 crores the Government of India have proposed a provision of Rs. 7½ crores in the Third Five-Year Plan and the balance in the Fourth Plan.

SRI N. K. PALANISAMI : இதைப்பற்றி விசாரணை செய்த ராமசாமி முதலியார் கமிட்டியார் இதற்காக 10 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னார்கள். இப்போது 30 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இப்படி 30 கோடி ரூபாய் ஆகும் என்று எஸ்டிமேட் போட்டது யார்? இவ்விதம் அதிகமாக போட்டு இதை எடுத்துக் கொள்ளவேண்டாம் என்ற எண்ணத்தில் இவ்விதம் போட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN: எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற முறையில் இவ்விதம் போடவில்லை. இந்தியா கவர்ன்மென்ட் அதிகாரிகள் இதைப்பற்றி பரிசிலனை செய்துதான் 30 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியில் பணியாற்றிய கேப்டன் டேவிஸ் என்பவரை வரவழைத்து இதைப்பற்றி இன்னும் பரிசீலிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

SRI N. K. PALANISAMI : பரிசிலனை செய்வது வேறு விஷயம், திட்டத்தில் சேர்ப்பது வேறு விஷயம். இந்த நிபுணர் ராமசாமி முதலியார் கமிட்டியிலும் இருந்திருக்கிறார். இதைப்பற்றி அடிப்படையான ஒரு முடிவுக்கு வந்தவுடனேயே ஏன் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது ?

THE HON. SRI P. KAKKAN : முதலில் குறைவான தொகை தான் ஆகும் என்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் 30 கோடி ஆகும் என்று சொல்லப்பட்டது. எந்த விஷயமானாலும் நல்ல முறையில் பரிசிலனை செய்வதுதான் நல்லது. திடீரென்று முடிவு செய்வது நல்லதல்ல. ஆகவே இதைப்பற்றி நன்றாக பரிசிலனை செய்த பிறகுதான் இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI N. R. THIAGARAJAN : சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் இவைகள் எல்லாம் ஆரம்பித்த சர்க்காருக்கு அதிலிருந்து நல்ல லாபம் கிடைத்ததாக கூறப்படுகிறது. ஆகவே 30 கோடி ரூபாய் செலவில் இந்த சேதுசமுத்திரத் திட்டத்தையும், 10 கோடி ரூபாய் திட்டத்தில் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் எடுத்துக்கொண்டால் இதிலிருந்து கிடைக்கும் லாபம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திட்டத்தைப்பற்றி பரிசிலித்துக்கொண்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : ராமசாமி முதலியார் கமிட்டியார் இதற்கு 10 கோடி ரூபாய் ஆகும் என்றும், அதற்கு பின்னால் வந்த கமிட்டியார் 30 கோடி ரூபாய் ஆகும் என்றும், இப்போது இறுதியாக ஆராய்ச்சி செய்பவர்கள் இதைவிட குறைவாகவே இருக்கும் என்றும் கருதுவது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : அது உண்மையில்லை.

SRI M. K. SOMASUNDARAM: இந்த சேதுசமுத்திரத்திட்டம் எவ்வளவு காலத்திற்குள் எடுத்துக்கொள்ளப்படும்?

THE HON. SRI P. KAKKAN: இதற்கான போரிங் பரிசிலனை முடிந்த பின்னுல்தான் இதைப் பற்றிக்கூற முடியும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: இந்த சேதுசமுத்திரத் திட்டம் பரிசிலிக்கின்ற பொழுதே, இப்போது கொழும்புக்கு பிரயாணிகள் போகின்ற தனுஷ்கோடி பீயரை மூடிவிடப்போவதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று மக்கள் புகார் செய்கிருர்களே அது வாஸ்தவமா?

THE HON. SRI P. KAKKAN: இதைப்பற்றி பின்னுல் கேள்வி வருகிறது. அப்போது இந்தக் கேள்வியை கேட்கலாம்.

SRI N. K. PALANISAMI: ஸார், சென்னைக்கு வரக்கூடிய கப்பல்கள் இட நெருக்கடி காரணமாக விசாகப்பட்டிணத்திற்கு (வைசாக்) டைவர்ட் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. ஆகவே இப்போதுள்ள போர்ட்டை அபிவிருத்தி செய்து வருவது எவ்வளவு முக்கியம் என்று கருதப்பட்டு வருகிறதோ, அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தையும் எவ்வளவுதான் செலவு ஆனுலும் இதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நமது சர்க்கார் மத்திய சர்க்காரை நிர்பந்தம் செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: நான் முன்னுல் கொடுத்த பதிலில் சொன்னேன், இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் இதைப்பற்றி பல முறை பேசியிருக்கிறது என்று. அதோடு கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி கப்பல்களிலிருந்து இட நெருக்கடி காரணமான சிக்கிரமாக சாமான்களை இறக்க முடியவில்லை என்றிருப்பதால்தான், அதை தவிர்ப்பதற்கு, நாகப்பட்டிணம், கடலூர் போன்ற போர்ட்டுகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Electric supply to Government offices (Thanjavur)

* 1074 *Q*.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: கனம் ரெவினியு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் உள்ள மின்சார வசதி இல்லாத எல்லா அரசாங்க காரியாலயங்களிலும் மின்சாரம் போட உத்தேசம் உண்டா?

(இ) கும்பகோணம் தாலுகா ஆபீஸ் மிகவும் இருண்டு கிடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) Yes, Sir. The Government have already issued odrers to this effect.

(இ) Yes, Sir. Orders for electrification have been issued already.